RNI-NO: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 84 | ஏப்ரல்.2 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# என்டிஏ ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டின் பெயரை மாற்றவும் தயங்காது : திருச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஏப்.2-

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், திருவாரூரில் நேற்று தனது தேர்தல் பிரச்சார பயணத்தை தொடங்கினார். அங்கு பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு இரவு திருச்சி கோர்ட் யார்ட் நட்சத்திர விடுதியில் ஓய்வெடுத்தார்.

தொடர்ந்து, இன்று காலை, திருச்சி கிழக்குத் தொகுதியில் வாக்கிங் சென்றபடி திமுக சார்பில் போட்டியிடும் இனிகோ இருதயராஜ்க்கு ஆதரவாக வாக்கு கேட்டார். இத்தொகுதியில் தவெக தலைவர் சி.ஜோஸப் விஜய் போட்டியிடுகிறார். நாளை விஜய் இத்தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார்.

பின்னர் ஸ்டாலின் நட்சத்திர விடுதிக்கு சென்று காலை உணவு முடித்துக் கொண்டு, தென்னூர் உழவர் சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார்.

அங்கு திமுக வேட்பாளர்கள் திருச்சி மேற்கு கே.என்.நேரு, திருவெறும்பூர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி கிழக்கு இனிகோ இருதயராஜ், மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன், ஸ்ரீரங்கம் துரைராஜ், முசிறி கருணை ராஜா, லால்குடி பாரிவள்ளல், மமக ப.அப்துல்சமது ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திலும், காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறையூர் (தனி) தொகுதிக்கு கை சின்னத்திலும் வாக்களிக்குமாறு கேட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

திருவாரூரில் பிரச்சாரத்தை தொடங்கி, திருச்சிக்கு வந்திருக்கிறேன். கடந்த முறை திருச்சி மாவட்டத்தில் 9 தொகுதிகளிலும் திமுகவுக்கு வெற்றியை தந்தீர்கள். அந்த வெற்றியால், சிறந்த 2 அமைச்சர்களைத் தமிழகத்துக்கு தந்தீர்கள். இந்த முறையும் திருச்சியில் முழு வெற்றி. தலைநகர் சென்னைக்கே சவால் விடும் வகையில் திருச்சி இன்றைக்குத் தரம் உயர்ந்து வருகிறது. 5 ஆண்டுகளில் திருச்சிக்காக ரூ.26 ,066 கோடி மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாதிக் கலவரம் இல்லை. பாஜக ஆளும் மாநிலங்களான உ.பி., மணிப்பூர் ஆகியவற்றில் உள்ளதுபோல மதக் கலவரங்கள், கும்பல், தொடர் வன்முறைகள் இல்லை. கலவரம் உருவாக்க வேண்டும் என்று பாஜக செய்த சூழ்ச்சிகளையும் முறியடித்திருக்கிறோம்.

திமுக தேர்தல் அறிக்கையில், இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 கூப்பன் வழங்கும் சூப்பர் டூப்பர் வாக்குறுதியை பற்றித்தான் ஒரே பேச்சாக உள்ளது. நம்முடைய பெண்கள் ஒரு சேலை வாங்கினால் கூட, அவர்களுக்குப் பிடித்த கடையில், பிடித்த டிசைனில், கலரில் வாங்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதை மனதில் வைத்துதான் இந்த திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

இல்லத்தரசி திட்டத்தில் எல்லாமே 'உங்கள் சாய்ஸ்'தான். அனைத்து தொகுதிகளிலும் முதல்வர் படைப்பகங்கள் அமைக்கப்படும். இல்லத்தரசிகள் திட்டத்தைப்



ஊழலுக்கான திட்டம் என சம்பந்திக்கு காண்ட்ராக்ட் கொடுப்பதற்காகவே ஆட்சியை நடத்திய பழனிசாமி கூறுகிறார்.

திமுகவின் திட்டம் ஒவ்வொன்றும் தரமானது என்பதற்கு உதாரணம் கலைஞர் டிவி. 20 ஆண்டுகளாகியும் இன்றும் பல வீடுகளில் கலர் டிவியாக மட்டுமல்ல, கலைஞர் டிவியாக அது நிலைத்து நிற்கிறது. அதிமுக ஆட்சியில் வழங்கிய மிக்சி, கிரைண்டர், மின்விசிறி காயலாங்கடையில் இருக்கிறது. மக்களுக்கு நல்லது நடக்கக் கூடாது என்று, வயிற்றெரிச்சலில், தன்னை போலவே பிறரையும் நினைத்து ஊழல் நடக்கும் என்று பேசுகிறார்.

மதுரை பாஜக ஆதரவு கூட்டத்தின் நுழைவு வாயிலில் தந்தை பெரியார் படத்தை வைக்கக் கூடாது என்று பாஜக சொன்னதும், சுயமரியாதையே இல்லாமல் அதை எடுக்கத் துணிந்தவர்தான் பழனிசாமி. அதில் பெரியாரையும், அண்ணாவையும் கொச்சைப்படுத்தும் காணொலியை வெளியிட்டார்கள். அதிமுக முன்னாள் அமைச்சர்கள் 3 பேர் கொஞ்சம் கூட சொரணையே இல்லாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா இருந்தால் அண்ணாவை அசிங்கப்படுத்தினால் பார்த்துக்கொண்டு சும்மா இருந்திருப்பார்களா? பழனிசாமியின் ஒரே சாதனை அதிமுக எனும் கட்சியை அடிமைக் கூட்டமாக சீரழித்து இருப்பதுதான். 'திராவிடம்' என்ற சொல்லும் அந்தக் கூட்டத்தில் அவமானப்படுத்தப்பட்டது. திராவிடம் பற்றி படித்ததில் என்றார். யார் எக்கேடு கெட்டாலும் தன்னுடைய பதவியை காப்பாற்றிக் கொள்ள பாஜகவின் பாதம் தாங்கியாக பழனிசாமி உள்ளார்.

சிறுபான்மையினர், இலங்கைத் தமிழர்களுக்கும் துரோகம் இழைக்கும் வகையில் குடியுரிமைத் திருத்தச் (சிஏஏ) சட்டத்தை ஆதரித்து அது நிறைவேற துணைபோன கட்சிதான் அதிமுக. இவர்களுடன் சேர்ந்து 'பாட்டாளி' அன்புமணி ராமதாசும் ஆதரவாக வாக்களித்து துரோகம் செய்தார். இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான சிஏஏ சட்டமே நிறைவேறியது. அதைத் தொடர்ந்து நடந்த போராட்டங்களில் 70 பேர் கொல்லப்பட்டார்கள்.

இவர்களின் ரத்தக்கறை இன்றைக்கு அதிமுக கையில் இருக்கிறது. 'சிஏஏ சட்டத்தால் எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார் என்று காட்டுங்கள்' என்றவர் தான் பழனிசாமி.

சிறுபான்மையினர் வாக்குகளுக்காக 2024 தேர்தலில் தனியாக நின்று நாடகம் ஆடி, சிஏஏ சட்டத்தை கண்டிப்பதாக பல்டி அடித்தார். 'பாஜக மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துகிறார்கள், சிஏஏ சட்டம் ஒரு வரலாற்றுப் பிழை' என்று பிளேட்டை திருப்பிப் போட்டார். நான் இப்போது கேட்கிறேன், பழனிசாமி, இப்போது அந்தச் சட்டத்தை ஆதரிக்கிறாரா?எதிர்க்கிறாரா? என வெளிப்படையா சொல்ல வேண்டும்.

பாஜக கொண்டு வந்த 3 வேளாண் சட்டங்களை ஆதரித்தார். அந்த சட்டத்தை எதிர்த்து போராடிய 8 மாநில விவசாயிகளை, 'புரோக்கர்கள்' என்று கொச்சைப்படுத்தினார். இப்படி, பாஜகவுடன் கூட்டணி சேர்ந்து, முழு சந்திரமுகியாகவே மாறி விட்டார். அதாவது, முழு சங்கியாகவே மாறிவிட்டார்.

அதிமுக கூட்டணியில் பிரச்சினை இல்லை என்று கூறும் பழனிசாமி எதற்காக பலமுறை டெல்லிக்குச் சென்றார்? கூட்டணிக்குத் தலைமை அதிமுகதான் என்று சொல்கிறார்கள். ஆனால், அனைத்து கட்சிகளும் ஏன் பாஜகவிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்? இது எப்படி தெரியுமா இருக்கிறது? 'மாப்பிள்ளை அவர்தான். ஆனால், அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது' என்று படையப்பா படத்தில் வரும் காமெடி போன்று இருக்கிறது.

நான் தெரியாமல்தான் கேட்கிறேன், கூட்டணிக்கு அதிமுக தான் தலைமை என்றால், அதில் இருக்கும் சிறிய கட்சிகள் ஏன் அதிமுக சின்னத்தில் போட்டியிடாமல், பாஜகவின் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள்? பழனிசாமியை முதலமைச்சர் ஆக்குவோம் என்று பிரதமர் மோடி சொல்லவில்லை. என்டிஏ சர்க்கார், என்டிஏ சர்க்கார் என்றுதான் சொல்கிறார். ஆனால், தமிழ்நாடு வெர்சஸ் என்டி, தமிழ்நாடு வெர்சஸ் டெல்லி என்று நாம் சொன்னால், 'இது என்ன டெல்லி தேர்தலா?' என கேட்கிறார் பழனிசாமி.

தன் மீதான ஊழல் புகார்கள், உறவினர்கள் வீடுகளில் நடந்த ரெய்டுகளில் இருந்து தப்பிக்க மொத்தக் கட்சியையும் பாஜகவிடம் பழனிசாமி அடகு வைத்துவிட்டார். எம்எல்க்களை ஏலத்தில் எடுத்து ஒரு முறை முதல்வராகிவிட்டார். மீண்டும் இவரிடம் ஆட்சி சென்றால் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் மொத்தமாக விற்றுவிடுவார்.

இவரின் ஓனரான பாஜகவின் ஒரே நோக்கம் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுப்பதுதான். நேராக வந்தால் தமிழக மக்கள் நோட்டாவிற்கு கீழே அனுப்பிவிடுவார்கள். அதனால் அதிமுக முகமூடியுடன் வருகிறார்கள்.

பாஜக 12 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தாலும், தமிழகத்துக்கு ஒரு சிறப்புத் திட்டம் கூட இல்லை. ஆனால் தேர்தல் வந்துவிட்டது என்று, தமிழ்நாட்டிற்குக் கிளம்பி வருகிறார் பிரதமர் மோடி. கடந்த மாதம் திருச்சிக்கு வந்த மோடி, மத்திய பாஜக அரசு தமிழகத்துக்கு செய்த திட்டங்கள் பற்றி எதுவும் சொன்னாரா? இருந்தால்தானே சொல்ல முடியும். இதில், திமுக எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லிவிட்டுச் செல்கிறார்.

பிரதமர் மோடி தமிழத்தில் ஒருவாரம் தங்கியிருந்து, தலைசிறந்த தமிழ்நாடாக இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் தொடர வேண்டும் என்றால், 7வது முறையும் திமுக ஆட்சி அமைய வேண்டும், பாஜகவும் அதன் கொத்தடிமைக் கூட்டமும் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தால், உத்தரபிரதேசம், மணிப்பூர் போன்று வன்முறைக் காடாக ஆகிவிடும். இவர்கள் வந்தால் தமிழ்நாட்டின் பெயரையே தட்சிண பிரதேஷ் என்று மாற்றவும் தயங்க மாட்டார்கள்.

இதைத் தடுக்க வேண்டும் என்றால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் பாஜக அதிமுக கூட்டணிக்கு எதிராக, ஓரணியில் இணைய வேண்டும். நம்முடைய எதிரிகளையும், பாஜகவின் உதிரிகளையும் வீழ்த்த வேண்டும். நாம் போராடுவது, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக. பாஜகவின் டப்பா இன்ஜின் முன்னால், நம்முடைய திராவிட மாடலின் சூப்பர் ஃபாஸ்ட் எஞ்சின் ஒருபோதும் தலைகுனியாது. நம்முடைய ஸ்பீடு என்ன என்று காண்பிப்போம்.

இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, தமிழ்நாட்டைக் காக்க, அனைவரும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## மதுரையில் அரிய இதய குறைபாட்டுக்கு அறுவை சிகிச்சை இல்லாமல் வெற்றி

### 64 வயது விவசாயிக்கு புதிய வாழ்வு




மதுரை, ஏப்.2

மதுரையில் உள்ள மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் 64 வயது விவசாயிக்கு ஏற்பட்டிருந்த அரிய பிறவி இதயக் குறைபாடு, குறைந்தபட்ச ஊடுருவல் முறையில் வெற்றிகரமாக சரிசெய்யப்பட்டுள்ளது.

'சைனஸ் வினோசஸ் ஏஎஸ்டி' (Sinus Venosus ASD) எனப்படும் இந்த அரிதான குறைபாடு, இதயத்தின் மேல் அறைகளுக்கு இடையில் அசாதாரண துவாரம் உருவாகி, ஆக்சிஜன் நிறைந்த ரத்தம் தவறான திசையில் பாயச் செய்வதாகும். இதனால் நோயாளிக்கு மூச்சுத்திணறல், எளிதில் சோர்வு, இதயத் துடிப்பு அதிகரிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன.

நோயாளிக்கு டிரான்ஸ்தொராசிக் எக்கோ, டிரான்ஸ்இசோபேஜியல் எக்கோ மற்றும் கார்டியாக் சிடி ஸ்கேன் உள்ளிட்ட விரிவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில் இந்த குறைபாடு உறுதி செய்யப்பட்டது.

பொதுவாக இத்தகைய பிரச்சினைக்கு திறந்தநிலை இதய அறுவை சிகிச்சை செய்யப்படுவது வழக்கம். ஆனால், இம்முறை மருத்துவர்கள் குழு அறுவை சிகிச்சையை தவிர்த்து, 'டிரான்ஸ்கேத்தீட்டர் கவர்டு ஸ்டென்ட்' (Transcatheter Covered Stent) முறையை பயன்படுத்தி ரத்த நாளம் வழியாக ஸ்டென்ட் செலுத்தி குறைபாட்டை சரிசெய்தனர்.

இதயவியல் துறைத் தலைவர் டாக்டர் சிவக்குமார் தலைமையில், இதய மயக்க நிபுணர் டாக்டர் எஸ்.குமார் மற்றும் கேத் லேப் குழுவினர் இணைந்து இந்த சிகிச்சையை மேற்கொண்டனர். சிகிச்சைக்கு பிறகு நோயாளி 31 மணி நேரம் தீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிக்கப்பட்டு, நல்ல உடல்நிலையுடன் வீடு திரும்பினார்.

மருத்துவர்கள் கூறுகையில், "தென் தமிழகத்தில் இத்தகைய சிக்கலான பிறவி இதயக் குறைபாட்டிற்கு அறுவை சிகிச்சை இல்லாமல் டிரான்ஸ்கேத்தீட்டர் முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது அரிதான ஒன்று. மேம்பட்ட இமேஜிங் தொழில்நுட்பத்தின் உதவியால் இது பாதுகாப்பாக செய்யப்பட்டுள்ளது. மூச்சுத்திணறல், சோர்வு போன்ற அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறுவது அவசியம்" என தெரிவித்தனர்.

இந்தச் சாதனையில் மருத்துவமனை மருத்துவர்கள் குழுவினர் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

## ராகுல் காந்திக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது: அசாமில் பிரதமர் மோடி பேச்சு

கோகாமுக்: ஏப்.2-

அசாமில் 3வது முறையாக தேசிய ஜனநாயக் கூட்டணி ஆட்சி அமையும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது என்று விமர்சித்தார்.

அசாம் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி கோகாமுக் பகுதியில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "முதலில் சர்பானந்த சோனாவால் தலைமையிலும் பின்னர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலும் அசாமில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த 10 ஆண்டுகால ஆட்சியில், அசாம் ஒரு புதிய சேவை மற்றும் நல்லாட்சிக்கான சகாப்தத்தைக் கண்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை கட்டமைக்க வளர்ந்த அசாமை உருவாக்குவதற்கான தேர்தல் இது. இம்முறையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்பது உறுதி. அதேபோல், காங்கிரஸ் கட்சிக்கும் மூன்றாவது முறையாக தோல்வி கிடைப்பது உறுதி. காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு 100 வது தோல்வி காத்திருப்பதும் உறுதியாகிவிட்டது.



அசாம் தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு இதுவே எனது முதல் பொதுக்கூட்டம். இங்கு திரண்டுள்ள மக்கள் கடலே, நாங்கள் மூன்றாவது முறையாக வெற்றி பெற இருக்கிறோம் என்பதற்கான சான்று. உங்கள் ஆசியுடன் நான் மூன்றாவது முறையாக பிரதமரானேன். இந்த திடலுக்கு நான் வருகை தருவது இது மூன்றாவது முறை. உங்கள் ஆசியுடன் அசாமில் நாங்கள் மூன்றாவது முறை வெற்றி பெறுவோம்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 22 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உறுதியான வீடுகளை பெற்றுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைக்காத குடும்பங்களுக்கு கண்டிப்பாக வீடு கட்டித்தரப்படும். பாஜக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளின்படி, இத்திட்டத்தின் கீழ் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். ஏழை குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மழலையர் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்படும்.

பெண் லட்சாதிபதிகள் திட்டத்தின் கீழ் அசாமில் ஏற்கனவே சுமார் 3 லட்சம் பெண்கள் லட்சாதிபதிகளாகி உள்ளனர். அடுத்த 5 ஆண்டுகளில் 40 லட்சம் பெண்களை லட்சாதிபதிகளாக ஆக்க நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம்'' என தெரிவித்தார்.

முன்னதாக, அசாமின் திப்ருகரில் அமைந்துள்ள ஒரு தேயிலை தோட்டத்துக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு அவர் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய அவர், மாநிலத்தின் தேயிலைத் துறைக்கு அவர்கள் ஆற்றி வரும் பங்களிப்புக்கு பாராட்டு தெரிவித்தார்.

அசாமில் மொத்தமுள்ள 126 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக ஏப்ரல் 9ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற உள்ளது. அசாமில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அசாம் கனபரிஷத், போடோலாந்து மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது முறையாக வெற்றி பெற தேசிய ஜனநாயகக் கூட்டணி தீவிரம் காட்டி வரும் அதேநேரத்தில், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் கட்சியும் தீவிரம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.





# பம்மல் L & G குளோபல் கிட்ஸ் அகடாமி பள்ளியின் 13வது ஆண்டு விழா மழலை குழந்தைகளின் பட்டமளிப்பு வெகு சிறப்பாக நடைபெற்றது

பம்மல் ஏப். 02-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் உள்ள லி - நி குளோபல் கிட்ஸ் அகடாமியின் 13 வது ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா ஞாயிற்றுகிழமை கிழமை காலை வெகு சிறப்பாக நடைப்பெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளரும், முதல்வருமான டாக்டர் ஜி.இளையராணி சிவதாசன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சி சிறப்பு விருந்தினராக ஞீளிபிளி குழும அதிகாரி ரெபேக்கா கண்ணா, டாக்டர் மேரி யாஸ்மின் தட்டில் மற்றும் குழந்தை மனநல ஆலோசகர் ஸ்ரீவித்யா ராமநாதன் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

தொடக்க நிகழ்வாக பள்ளி ஆண்டு விழாவிற்கு வருகை தந்த அனைத்து பெற்றோர்களுக்கும் பள்ளி சார்பில் நினைவு பரிசு வழங்கி கவுரவித்தனர்.

பின்னர் மழலை குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழா நடைப்பெற்றது. இதில் குழந்தைகள் பட்டமளிப்பு உடையை அணிந்து ஒய்யரமாக நடந்து வந்து பட்டங்களை பெற்று சென்றனர்.

தொடர்ந்து லி - நி குளோபல் கிட்ஸ் அகடாமியின் மாணவ, மாணவியர்கள் ஆடல், பாடல் உள்ளிட்ட நடன, கலை நிகழ்ச்சிகளும், கதைகள் மற்றும் யோகா கலைகளையும் செய்து அசத்தினர். மழலை குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை பள்ளியின் தாளாளர் சிவதாசன் மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் அம்பத்தூர் சட் டமன்ற தொகுதியில் போட்டி

மாதவரம், ஏப்.2-

வருகின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் அம்பத்தூர் சட் டமன்ற தொகுதியில் போட்டியிடும் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர் கே.என்.சேகர் (வயசு 56) மாம்பழம் சின்னத்தில் போட்டி யிடுகிறார். இவர் செங்குன்றம் அருகே உள்ள பெருங்காவூர் கிராமத்தில் வசித்துவரும் நடேசன் பட்டம்மாள் இவர்களது மகன் ஆவர். இவர் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார்.இவருக்கு லட்சுமி முன்னாள் கவுன்சிலர் என்ற மனைவியும் மேலும் மருத்துவர்கள் சூரியா, சுரேகா என்ற திருமணம்



ஆன இரண்டு மகள்கள் உள்ளன. இவர் தற்போது 25/16, அண்ணா தெரு, கள்ளிக்குப்பம், அம்பத்தூர் என்ற முகவரியில் வசித்துவருகிறார். கடந்த 36 வருடங்களாக ஸ்ரீ லட்சுமி ஓம் பிரவேட் லிமிடெட் நடத்தி வருகிறார். அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சியில் கிளை செயலாளர், நகர துணை செயலாளர், மாவட்ட தொண்டரணி தலைவர், மாவட்ட செயலாளர், மாநில துணை பொது செயலாளர் மற்றும் மாநில துணைத்தலைவராக பொறுப்பு வகித்தவர். இவர் அரசாங்க பதவியாக நகர மன்ற உறுப்பினர், 2006 முதல் 2010 வரை அம்பத்தூர் நகரமன்ற தலைவராக அரசியல் கலம் கண்டவர். இதேபோல் 2011 ம் ஆண்டு கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி மற்றும் 2016ம் ஆண்டில் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாம்பழம் சின்னத்தில் போட்டியிட்டு உள்ளார். தற்போது அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளராக கே.என்.சேகர் மாம்பழம் சின்னதில் போட்டி யிடுகிறார்.



# அதிமுக கூட்டணிக்கு கடும் அதிர்ச்சி: 'சிங்கம்' கர்ஜனையுடன் பார்வர்டு பிளாக் வெளியேறியது

மதுரை: ஏப். 2-

அதிமுக கூட்டணியில் இருந்து அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி விலகுவதாக முக்கிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மதுரை காளவாசல் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் மாநில குழுக் கூட்டம் மாநில தலைவர் கர்ணன் தலைமையில், மாநில துணைச் செயலாளர் பசும்பொன் மற்றும் இளங்கோவன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாநில பொதுச் செயலாளர் பி.வி. கதிரவனின் இடைநீக்கத்தை ரத்து செய்து, அவரை மீண்டும் பொதுச் செயலாளராக தொடரச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மேலும், தேசிய பொதுச் செயலாளர் கட்சியின் சட்டத்திட்டங்களுக்கு எதிராக செயல்படுவதாக குற்றம் சாட்டி கடுமையாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில், 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் வாய்ப்புள்ள தொகுதிகளில் "சிங்கம்" சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டது. அதிமுக கூட்டணியில் இருந்து விலகுவதாகவும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் திருப்பதி, பாஸ்கர பாண்டியன், இளையரசு, தங்கப்பாண்டி, அசோக் அம்பலம், லட்சுமி மாயாண்டி, ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் மகிழ்முற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது

காளையார் கோவில் ஏப் 02-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பாரில் மகிழ் முற்றம் நிகழ்ச்சி தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு மாதமும் அணிகளின் செயல்பாடுகளுக்கு வழங்கப்படும் மதிப்பெண் அடிப்படையில் , வெற்றி பெற்ற அணிக்கு ஊக்க பரிசுகள் வழங்கப்படுகிறது. மார்ச் மாதத்திற்கான செயல்பாடுகளான மாணவர்கள் வருகை, கற்றல் திறன், மன்ற செயல்பாடுகள், விளையாட்டு விழா, வானவில் மன்ற செயல்பாடுகள், ஆண்டு விழா போட்டிகள் போன்றவற்றிற்கு





ஒவ்வொரு அணியினருக்கும் தனித்தனியாக மதிப்பெண் வழங்கப்பட்டது. குறிஞ்சி அணி முதலிடத்தையும் மருதம், முல்லை அணி இரண்டாம் இடமும், மூன்றாம், மற்றும் நான்காம் இடங்கள் முறையே , நெய்தல், மற்றும் பாலை ,அணிகள் பெற்றன. முதலிடம் பெற்ற குறிஞ்சி அணிக்கு சுழற் கோப்பையும் ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் தலைமை ஆசிரியர் சுரேஷ், மகிழ் முற்றத்தின் நோக்கங்களான கற்றல் திறன்களை மேம்படுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல், அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகள் அளித்தல்,தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்,மற்றும் ஆசிரியர் மாணவர் உறவுகளை வலுப்படுத்துதல் போன்றவற்றை எடுத்துரைத்தார். மார்ச் மாதத்தில் முதலிடம் பிடித்த நெய்தல் அணியின் தலைவர் ஜோஸ்வா கொடியேற்றி சிறப்புரையாற்றினார். அணியின் தலைவர் ஜோஸ்வா துணைத் தலைவர் சாம் விக்டர் மற்றும் பொறுப்பாசிரியர் சகாய செல்வி ஆகியோர் சுழற் கோப்பையை பெற்றுக் கொண்டனர். பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார். ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு பொறுப்பாளர்கள், காலை சிற்றுண்டி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



வண்டலூரில் பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரெசன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் பாலிமர் பொறியியல் துறை, பாலிமர் பொறியாளர்கள் சங்கம் (கிறிணி) இணைந்து விகிசிஸிளிழி2026 நிகழ்ச்சி நடைபெற்றது

வண்டலூர் ஏப்.02-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் தேசிய அளவிலான கருத்தரங்கம் கூட்டம் பி. எஸ். அப்துர் ரஹ்மான் கிரெசன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் பாலிமர் பொறி யியல் துறை, பாலிமர் பொறியாளர்கள் சங்கம் (APE) இணைந்து MA-CRON2026 தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கத்தை 2026 ஏப்ரல் 1ஆம் தேதி, கன்வென்ஷன் சென்டர், செமினார் ஹால்ஹீமி இல் நடைபெற்றது .

இந்நிகழ்ச்சியில் கிங்ஃபா சயின்ஸ் - டெக்னாலஜி இந்தியா லிமிடெட், சென்னை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டி.பாலாஜி தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் இந்த நிகழ்ச்சியில் துணை வேந்தர் ! பொறுப்பு டாக்டர் அ.பீர் முகமது தலைமை உரையாற்றினார். பதிவாளர் டாக்டர் ந.ராஜா ஹுசைன் வாழ்த்துரை வழங்கினார். மேலும், சேர்க்கை இயக்குநர் டாக்டர் எஸ்.எஸ்.எம். அப்துல் மஜீத் மற்றும் டீன் (SMS) டாக்டர் ஹெச். சித்தி ஜைலானி ஆகியோர் கன்வீனர்களாக (Con-venors) செயல்பட்டனர் துறைத் தலைவர் பொறுப்பு டாக்டர் சு.ஷம்ஷாத் பேகம் வரவேற்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக டாக்டர் ரா.தௌலத் பானு அவர்கள் செயல்பட்டார் இக்கருத்தரங்கத்தில் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்கள் கலந்து கொண்டு பாலிமர் பொறியியல் துறையின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடினர்.



# நிலக்கோட்டையில் அ.தி.மு.க நிர்வாகிகள் கூட்டம்

## திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப நிர்வாகிகள் இரவு பகலாக பாடுபட வேண்டும் வேண்டுகோள்

நிலக்கோட்டை, ஏப்.2-

திண்டுக்கல் மாவட்டம் ,நிலக்கோட்டை ஒரு தனியார் மகாலில் அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நிலக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் யாகப்பன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் , நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும், அதிமுக நிலக்கோட்டை சட்டமன்ற வேட்பாளருமான தேன்மொழி சேகர் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். மேற்கு ஒன்றிய செயலாளர் நல்லதம்பி வரவேற்று பேசினார். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான நத்தம் இரா .விசுவநாதன் கலந்து கொண்டு பேசியதாவது: இன்றைக்கு தமிழகத்தில் அதிமுக திமுகவுக்கு இடையில் தான் தீவிரமான போட்டி நடந்து கொண்டு இருக்கிறது. நடைபெற இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக ஆட்சியை விட்டு வீட்டுக்கு அனுப்ப அதிமுக உயிர்நாடி யான அதிமுக தொண்டர்கள் கடுமையான உழைப்பால் மட்டுமே திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப முடியும். இன்றைக்கு தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் பாலியல் வன்கொடுமை அதிகமாக நடைபெற்று வருகிறது பட்டப் பகலில் பஸ்ஸில் செல்ல கூட முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம் கஞ்சா,அபின், மது, கரைன் உள்ளிட்ட போதை பொருட்கள் தான் இன்றைக்கு மக்களை நிலைகுலையச் செய்து இது போன்ற அனுமதிக்க முடியாத குற்றச் செயல்கள் நடுவர் நடைபெறுவதை தடுக்க முடியாத ஒரு அரசு திமுக அரசு. அதை மக்கள் புரிந்து வருகிற சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவை அதிக பெரும்பான்மை அளவில் வெற்றி பெற வைப்பார்கள். இருப்பினும் இரவு பகல் வாராமல் நிர்வாகிகள் அனைவரும் இந்த கடந்த 20 நாட்கள் கடுமையாக உழைத்து அதிமுகவை ஆட்சி கட்டிலில் அமர வைக்க பாடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இக்கூட்டத்தில் அம்மையநாயக்கனூர் நகரச் செயலாளர் தண்டபாணி, நிலக்கோட்டை நகரச் செயலாளர் வி.எஸ். எஸ். சேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் ரேவதி தங்கபாண்டியன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மூர்த்தி,ஒன்றிய அவைத் தலைவர்கள் தவமணி, குணசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஜெயசீலன், சீனிவாசன், எம்ஜிஆர் மன்ற கிழக்கு ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், காட்டுராசா, நகரப் பொருளாளர் பூக்கடை சரவணன், முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினர் சரவணன், மாவட்ட பிரதி நிதி சேசுராஜ், மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு செயலாளர் சிமியோன் ராஜ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுக வேட்பாளரை அபாசகுனமாக பேசி கிண்டல் அடித்த ராஜ கண்ணப்பன்

முதுகுளத்தூர் ஏப்: 01-

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2026 ஆம் ஆண்டு திமுக வேட்பாளராக போட்டியிடும் ராஜ கண்ணப்பனிடம் அதிமுக வேட்பாளருக்கு நீங்கள் அரசியல் ஆசான் என கூறுகிறார்கள் அது பற்றி என்ன கூறுகிறீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு இடைத்தேர்தல் வராமல் இருந்தால் சரி என நக்கலாக பதில் கூறினார்



இது பற்றி முதுகுளத்தூர் தொகுதி மக்கள் கூறுகையில் அதிமுக வேட்பாளரை கேலி செய்யும் விதமாக அல்லது வேட்பாளரின் வயது முப்பு காரணமாக இடைத்தேர்தல் வரும் என கூறினாரா வேறு ஏதும் உள்நோக்கம் உள்ளதா எனவும் ஏற்கனவே இவர் மதுரை பொது மேடையில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியன் இல்ல விழாவின் பொழுது பாவம் ஒடுக்கப்பட்டவன் விழா வைத்திருக்கிறான் அங்கு செல்ல வேண்டும் என முதல்வரிடம் கூறியதாக கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது சமூக நீதி கட்சி என கூறும் திமுகவில் இப்படி ஒரு வேட்பாளரா எனவும் ஒரு அமைச்சர் எல்லோருக்கும் பொதுவானவர் ஆனால் ஒவ்வொரு முறையும் அமைச்சர் ராஜ கண்ணப்பன் சாதியை பற்றி இழிவாகவும் தனிமனிதனை பற்றி இழிவாகவும் விமர்சனம் செய்து வரும் இவர் எப்படி பொது வாழ்க்கையில் எல்லோரையும் மதிப்பார் என முதுகுளத்தூர் தொகுதி மக்கள் பரவலாக பேசி வருகின்றனர்



# போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி த.வெ.க வேட்பாளர் ஆர். என் பிரகாஷ்க்கு உற்சாக வரவேற்பு

தேனி ஏப்.02-

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொது தேர்தலில் தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் ஆர். என் பிரகாஷ் போட்டியிடுகிறார். தேனி வடக்கு ஒன்றியத்தின் சார்பில் பழனிசெட்டிபட்டி பேருந்து நிறுத்தத்தில் தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சரவணகுமார் தலைமையில் பட்டாசு வெடித்து ,பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்வில் நகர செயலாளர் ஜெயந்த்,பழனிசெட்டிபட்டி பேரூர் கழக செயலாளர் சந்தானம் ,தேனி வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆனந்தகுமார், ராஜவேல், கிருஷ்ணன், சிவசந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஆர்.என்.பிரகாஷுக்கு கட்சி நிர்வாகிகள் சார்பில் ஆளுயுர மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# தேர்தல் விதிமுறை மீறல்: தர்மபுரி நாதக வேட்பாளர் மீது வழக்குப்பதிவு

தர்மபுரி, ஏப்.2-

தர்மபுரி தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளராக சாந்தலட்சுமி போட்டியிடுகிறார். பிரசாரத்தை துவங்குவதற்கு முன்பாக நேற்று முன்தினம் அதியமான்கோட்டையில் உள்ள அதியமான் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த தர்மபுரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அனுமதி கேட்டுள்ளார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சாந்தலட்சுமி, அதியமான் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தியுள்ளார்.தேர்தல் முடிவுகள்

இதுதொடர்பாக அதியமான்கோட்டை கிராம நிர்வாகி அதிகாரி மாது, சுற்றுலா பகுதியில் தேர்தல் நன்னடத்தை விதிமுறை மீறி செயல்பட்டதாக நாதக வேட்பாளர் மீது அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் தேர்தல் நடத்தை விதியை மீறியது தொடர்பாக போலீசார் 2 பிரிவின் கீழ் சாந்தலட்சுமி மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்

# குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டகுன்னூர் விவேக் மஹால்வேட்பாளர் அறிமுக கூட்டம்





குன்னூர் ஏப். 2-

குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டகுன்னூர் விவேக் மஹால்வேட்பாளர் அறிமுக கூட்டம் செயல் வீரர்கள் வீராங்கனை கூட்டம் நடைபெற்றது குன்னூர் சட்டமன்றதொகுதி வேட்பாளர் சாந்தி ராமு தலைமையில் நீலகிரி மாவட்ட கழகச் செயலாளர் கப்பச்சி வினோத்முன்னிலையில்இந்நிகழ்ச்சியில் கழகம் பாரதிய ஜனதா கட்சியின் நீலகிரி மாவட்ட பொதுச் செயலாளர் குமார்பாமக மாநில துணைச் செயலாளர் செந்தில்பாமக மாவட்ட செயலாளர்கள் குணசேகரன்குன்னூர் நகரம் செயலாளர்சரவணகுமார்அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் நகர செயலாளர் சுரேஷ்

மேலூர் ஒன்றிய செயலாளர் SMT தங்கவேல்குன்னூர் கிழக்கு ஒன்றியசெயலாளர்

கோபால் ராஜ்குன்னூர் கண்டோண்மென்ட் செயலாளர் துரைராஜ் அதிகரட்டி பேரூராட்சி செயலாளர் சீனிவாசன்உலிகால் பேரூராட்சி செயலாளர் ராமலிங்கம்மாநில மாவட்ட ஒன்றிய நகரம் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் கழகத்தின் முக்கிய கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்





உதகை ஏப்.2-

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் தொகுதி வேட்பாளர் கே.எம்.ராஜூ வரவேற்றார்.

கழக தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமசந்திரன்மற்றும் கூடலூர் தொகுதி வேட்பாளர் திராவிடமணி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில், 2026 சட்டமன்ற தேர்தலில்குன்னூர், கூடலூர் தொகுதிகளுக்கு கழக வேட்பாளர்களை அறிவித்த கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

சட்டமன்ற தேர்தலில் உதகை ,குன்னூர், கூடலூர், தொகுதிகளில் வரலாற்று சிறப்புமிக்க வெற்றி பெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர கழக செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, சிவானந்தராஜா, பிரேம்குமார், பீமன், சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, லியாகத்அலி, வீரபத்திரன், பில்லன், ராஜேந்திரன், உதயதேவன், அமிர்தலிங்கம், மோகன்குமார், செல்வம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், ரமேஷ்குமார், சுப்ரமணி, சின்னவர், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், கோமதி, விவேகானந்தன், ராஜா, காந்தல் ரவி, வெங்கடேஷ், ராம்குமார், ஆல்வின், வெங்கடேஷ், ரஹமத்துல்லா, ஜெயந்தி, செந்தில்நாதன், அன்வர்அப்துல்லா, சுரேஷ்குமார், ஆலன், ஜெயகுமார், தீனதயாளன், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சுசிலா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, ஹேமாமாலினி, சித்ராதேவி, ராதா, வள்ளி, சத்யவாணி, பங்கஜம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நவுபல், பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன், வினோத்குமார், போக்குவரத்து தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், மண்டல பொது செயலாளர் ஆனந்தன் ஆகியோர் கலந்துக்

கொண்டனர்.



# காவேரிப்பட்டணத்தில் 2ம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழா பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்

கிருஷ்ணகிரி, ஏப்.02-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் நகரில் அமைந்துள்ள பன்னீர் செல்வம் தெருவிலுள்ள ஸ்ரீவள்ளி தேவயானை சமேத சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 2ம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழா விமரிசையாக நடைபெற்றது.

இந்த திருவிழா நேற்று காலை 8.00 மணிக்கு தொடங்கியது. காவேரிப்பட்டினம் நகரப் பகுதிகள் முழுவதும் சுவாமி அலங்கரிக்கப்பட்டு, பெண்கள் பால் குடம் எடுத்தும், பக்தர்கள் காவடி ஆட்டத்துடன் உற்சாகமாக ஊர்வலமாக கலந்து கொண்டனர். தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

விழாவை முன்னிட்டு முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். முன்னதாக மார்ச் 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் காப்பு கட்டுதல், கும்பாபிஷேக முன்னோட்ட நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு பூஜைகள் நடைபெற்றன.

இவ்விழாவில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து ஆன்மிக மகிழ்ச்சி அடைந்தனர்.



# கிருஷ்ணகிரியில் நகர BDA செயல்வீரர்கள் கூட்டம் கை சின்னத்திற்கு வீடு வீடாக வாக்கு சேகரிக்க தீர்மானம்

கிருஷ்ணகிரி, ஏப்.2-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி மேற்கு நகர திமுக அலுவலகத்தில் ஙிஞிகி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் அறிவுறுத்தலின் பேரில், நகர பொறுப்பாளர் அஸ்லம் தலைமையில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மதச்சார்பற்ற தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் பேசிய நகர பொறுப்பாளர் அஸ்லம், "நாம் அனைவரும் கட்சி பாகுபாடு இன்றி மக்களை நேரில் சந்தித்து, வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்க வேண்டும். இது வெறும் தேர்தல் பணியல்ல, மக்கள் நலனுக்கான பொறுப்பாகும். திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கரங்களை பலப்படுத்தும் வகையில் முழு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்" என வலியுறுத்தினார்.மேலும், கிருஷ்ணகிரி நகரப் பகுதிகளில் ஒவ்வொரு வார்டிலும், தெரு தோறும் திட்டமிட்டு பிரச்சாரம் மேற்கொள்ளவும், பொதுமக்களிடம் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்களை எடுத்துரைக்கவும் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து நிர்வாகிகளும் ஒருமனதாக தீர்மானம் மேற்கொண்டு, "கிருஷ்ணகிரி நகரம் முழுவதும் விதிவீதியாக சென்று கை சின்னத்திற்கு அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறச் செய்வோம்" என்று உறுதி மொழி எடுத்தனர்.இந்த கூட்டம், வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.




# பாடியநல்லூர் ஊராட்சி பவானி நகரில் மகளிர் தினவிழா

மாதவரம், ஏப்.2-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பவானி நகரில் உள்ள ஸ்ரீபவானியம்மன் கோயில் அன்னதான மண்டபத்தில் சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் மற்றும் இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் மகளிர் தின விழாவ.வை முன்னிட்டு சமூகத்தில் சேவையாற்றி வருபவர்களுக்கும், ஆசிரியர் பணியில் சிறந்து விளங்குபவர்களுக்கும் மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் பாதுகாவலர்களுக்கான விருது வழங்கும் விழா இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு மாநிலத் தலைவர் மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது.தனியார் கல்லூரி முதல்வர் மகாலட்சுமி, சமூக சேவகர் அபுபக்கர், இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு மாவட்ட நிர்வாகிகள் தேவி, பரமேஸ்வரி, தமிழ்செல்வி, மகளிர் கூட்டமைப்பு தலைவர்கள் வேல்விழி, வனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முன்னதாக சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கத் தலைவர் அன்சர் ஃபாத்திமா, செயலாளர் ரமேஷ், பொருளாளர் கோபி, துணைத்தலைவர் நாகூர் அனிபா ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மருத்துவர் கமல்ராஜ், சமூக ஆர்வலர் ராஜ், தனியார் பள்ளி செயலாளர் செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சமூக சேவகர் விருதையும், சிறந்த மகளிர் குழுக்கான விருதையும், ஆசிரியர் பணியில் சிறந்து விளங்கும் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், ஆசிரியைகளுக்கும் விளையாட்டு, சிறுதானியம் உணவு தயாரித்தவர்களுக்கும் மற்றும் நடனக் குழுவினருக்கும் நினைவு கேடயம், பாராட்டுச் சான்றிதழ் உட்பட பரிசு பொருட்களை வழங்கி கௌரவித்து சிறப்புரையாற்றினர். இதில் இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு மாநில அமைப்பாளர் காஜா, மாநிலச் செயலாளர் மணி, சுரேஷ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.மேலும் அனைவரும் நூறு சதவீதம் வாக்குப்பதிவு செய்தல் உறுதிமொழி ஏற்றனர். முடிவில் கோமளவள்ளி சஞ்சய் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# கிருஷ்ணகிரியில் 450 ஆண்டு பழமையான சங்கல் தோப்பு தர்காவில் உரூஸ் திருவிழா சந்தனக்கூடு ஊர்வலம்




கிருஷ்ணகிரி, ஏப்.02-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அமைந்துள்ள சுமார் 450 ஆண்டுகள் பழமையான புகழ்பெற்ற சங்கல் தோப்பு தர்காவில் ஆண்டு தோறும் நடைபெறும் உரூஸ் திருவிழா இந்த ஆண்டும் கோலாகலமாக நடைபெற்றது. விழா அனைத்து ஜமாத்தார்களின் முன்னிலையில் கொடியேற்றத்துடன் தொடங்கி பல்வேறு மத நிகழ்ச்சிகளுடன் நடைபெற்று வந்தது.

இதன் முக்கிய நிகழ்வாக உரூஸ் திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியான சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி பழையபேட்டை கோட்டையிலிருந்து தொடங்கிய இந்த ஊர்வலத்தில், தர்கா கமிட்டி தலைவர் நவாப் தலைமையில், வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஜீப் மற்றும் பூட்டிய குதிரை சாரட் வண்டியில் சந்தனக்கூடு ஏற்றி மேளதாளங்களுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த ஊர்வலம் காந்தி சாலை, நேதாஜி சாலை, சேலம் சாலை, பெங்களூரு சாலை உள்ளிட்ட முக்கிய பகுதிகள் வழியாக சென்று இறுதியாக சங்கல் தோப்பு தர்காவை சென்றடைந்தது. வழியெங்கும் பொதுமக்கள் திரண்டு வந்து பக்தியுடன் வழிபட்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் சாதி, மத வேறுபாடுகளை மறந்து கலந்து கொண்டது விழாவின் சிறப்பாக அமைந்தது. முன்னதாக ஏராளமான இந்து பெண்களும் இஸ்லாமிய உரூஸ் திருவிழாவில் பங்கேற்று பூஜை பொருட்களை வழங்கி சமுதாய ஒற்றுமையை எடுத்துக்காட்டினர்.

பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக போலீசார் விரிவான பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த உரூஸ் திருவிழா கிருஷ்ணகிரியில் மத நல்லிணக்கத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.



# காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியத்தில் திமுக செயல்வீரர்கள் சந்திப்பு: "கை சின்னத்தில்" வாக்களிக்க உறுதியேற்பு

கிருஷ்ணகிரி, ஏப்.02-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியத்தின் கரடி அள்ளி, பன்னி அள்ளி, திம்மாபுரம் உள்ளிட்ட ஊராட்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் செயல்வீரர்கள் சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சரவணன் கலந்து கொண்டு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது, மாநில அரசின் மகளிர் உரிமை திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் பெண்கள் "உதவியால் அல்ல, உரிமையால் உயர்த்தப்பட்டுள்ளனர்" என்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, "கை சின்னத்தில்" அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும் என செயல்வீரர்களுக்கு அறிவுறுத்தினார்.

இச்சந்திப்பு நிகழ்வில் ஒன்றிய மற்றும் கிளை நிர்வாகிகள், செயல்வீரர்கள் மற்றும் கட்சி தொண்டர்கள் பெருமளவில் கலந்து கொண்டு, தேர்தல் பணிகளை தீவிரப்படுத்த உறுதி எடுத்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி நாகராஜ், உசேன் ஒன்றிய துணை செயலாளர் அம்மு பழனி, வள்ளி சின்ன பையன், வித்யா சக்தி கவுன்சிலர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், ராஜேஷ், முருகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# திருத்தணி முருகன் கோவிலில் பங்குனி உத்திரம்

## 1008 பால்குட அபிஷேகத்தில் திரளான பக்தர்கள் வழிபாடு!

திருத்தணி,ஏப்.2-

ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் படை வீடான திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில், பங்குனி உத்திரத் திருவிழா இன்று வெகுவிமர்சையாக நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக முருகப்பெருமானுக்கு 1008 பால்குட அபிஷேகம் நடைபெற்றது.பக்திப் பரவசத்தில் பக்தர்கள்பங்குனி உத்திரத்தை முன்னிட்டு அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலைக்கோவிலில் குவிந்தனர். விழாவையொட்டி, முருகப்பெருமானுக்கு 1008 பால்குடங்கள் கொண்டு வரப்பட்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர், சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு "அரோகரா" கோஷத்துடன் சுவாமி தரிசனம் செய்தனர்.நிர்வாக ஏற்பாடுகள்

இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருக்கோவில் நிர்வாகத்தினர் சிறப்பான முறையில் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில்:திருக்கோவில் இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர் ரமணிஅறங்காவலர் குழு தலைவர் ஸ்ரீதரன்அறங்காவலர்கள் சுரேஷ்பாபு, நாகன், மற்றும் மோகனன்உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். பக்தர்களின் வசதிக்காகக் குடிநீர், நிழற்பந்தல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.



## செங்குன்றத்தில் ஏழை எளியமக்களுக்கு அறுசுவை அன்னதானம்சுவையான மோர் வழங்கல்

மாதவரம், ஏப்.,2-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே பகவான் மகாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு நயீதிசா அமைப்பு சார்பில் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஏழை எளியமக்களுக்கு இனிப்புடன் கூடிய சுவையான மோர் மற்றும் அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.முன்னதாக நிகழ்ச்சியில் பகவான் மகாவீர் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.இதில் நயீதிசா அமைப்பின் அனைத்து நிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சினை சிறப்பித்தனர்.



■ கள்ளக்குறிச்சி ( தனி) சட்டமன்றத் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் வழக்கறிஞர் மாலதி கள்ளக்குறிச்சி திமுக தெற்கு மாவட்ட கழக செயலாளரும் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியின் திமுக வேட்பாளருமான வசந்தம் கார்த்திகேயன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்



## 100% வாக்குப்பதிவை ஊக்குவிக்கும் மெஹந்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி,ஏப்.02-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான தினேஷ் குமார் உத்தரவின்படி, 55 ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆளூர் ஊராட்சியில் 100 சதவிகிதம் வாக்குப்பதிவை உறுதிப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 100 க்கும் மேற்பட்ட பெண்கள் மெஹந்தி வைத்து "வாக்களிப்போம்" என்ற செய்தியை பரப்பி பொதுமக்களிடம் தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்வு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் கலா மற்றும் பலர் கலந்து கொண்டு விழிப்புணர்வு பணிகளில் ஈடுபட்டனர்.

## அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதி ஏற்படுத்த நடவடிக்கை

### தமிழக தேர்தல் ஆணையம் விளக்கம்

சென்னை, ஏப்.2-

தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும், மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க, சாய்தள வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது.

மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் வாக்குச் சாவடிகளில் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கோரி, மாற்றுத் திறனாளியான வைஷ்ணவி ஜெயகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும்



நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில், மாற்றுத் திறனாளிகள் சட்ட விதிகளை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக, முழுமையான விவரங்களுடன் மனுவாக தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் தரப்பில், வாக்குச்சாவடிகளில் நிரந்தர சாய்தள வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், மாற்றுத் திறனாளிகள், வாக்குச்சாவடிகளை எளிதில் அணுகும் வகையில் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை மனுவாக தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

## கமுதியில் உடல் முழுவதும் களிமண் சேறு பூசி களிமண் மனிதர்கள் (சேத்தாண்டி) நகர்வலம்**கமுதியில் வித்தியாசமான முறையில் நேர்த்திக்கடன்

கமுதி ஏப்:02-

ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் பங்குனி திருவிழா கடந்த மாதம் 23ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான இன்று அக்கினிச்சட்டி, தீக்குண்டம் இறங்குதல் நடைபெற உள்ளது. இதில் முக்கிய நிகழ்ச்சியான சேத்தாண்டி பக்தர்கள் அதிகாலை முதல் களிமண் சேறு பூசி களிமண் மனிதர்களாகவே மாறி கமுதியை நகர்வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.



ராமநாதபுரம் மாவட்டம் என்றாலே வெயிலின் தாக்கம் எப்போதும் அதிகமாக இருக்கும் உடல் சூடு மற்றும் தோல் வியாதிகளை குறைக்க அந்தக் காலத்திலேயே உடல் முழுவதும் களிமண் சேறு பூசி சேத்தாண்டி திருவிழா என்பது காலங்காலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கடந்த 10 நாள் விரதம் இருந்த பக்தர்கள் களிமண் சேற்றைக் குழைத்து தலை முதல் கால் வரை அடையாளம் தெரியாத அளவிற்கு பூசி கமுதி முழுவதும் உள்ள கோவில்களுக்கு மேள தாளங்களோடு சென்று இறுதியில் முத்துமாரியம்மன் கோவில் சென்று வழிபட்டு செல்கின்றனர்.

களிமண் இயற்கையாகவே குளிர்ச்சியானது என்பதால் அதை உடலில் பூசினால் உடல் குளிர்ச்சி பெறும் என்பதால் கமுதி சுற்றுவட்டார பகுதி மக்கள் களிமண் சேறு பூசி ஒரு மணி நேரம் நகர்வலம் வருவதால் உடல் குளிர்ச்சியாக இருக்கும் என்பதால் முத்து மாரியம்மனுக்கு நேர்த்திக்கடனாக சேத்தாண்டி வேஷம் போடத் தொடங்கினர்.

முன்பெல்லாம் களிமண்ணால் கட்டப்பட்ட வீடுகளில் வசித்த மக்கள் ஆரோக்கியமாக வாழ்ந்து வந்த நிலையில் தற்போது காங்கிரீட் வீடுகளில் வெப்பம் தாங்க முடியாமல் ஏர் கண்டிஷன் போட்டு வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இயற்கை மாறியதால் மனிதர்களும் மாறி விட்டனர்.

களிமண் குளிர்ச்சியானது என்பதால் கோடைகாலத்தில் வரும் வேர்க்குரு, வேனல்கட்டி, அம்மை போன்ற தோல் சம்பந்தமான நோய்கள் வராமல் இருக்கவும்,களிமண்ணுக்கு இயற்கையாகவே நீரை உறிஞ்சும் குணம் இருப்பதால் உடலில் பூசும்போது வியர்வை வரும் வியர்வை கண் அடைப்புகள் நீங்கி வியர்வை வெளியேறுவதால் உடல் குளிர்ச்சியாகும்.

இந்த ஆண்டு கமுதி மற்றும் வெளியூர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சேத்தாண்டி வேடம் இட்டு கமுதி முழுவதும் களிமண் மனிதர்களாகவே காட்சியளித்தனர்.



## திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் நடைபெற்றதேர்தல் விழிப்புணர்வு நாடகத்தை மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் துவக்கி வைத்தார்

திருவண்ணாமலை, ஏப்.2-

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் நடைபெற்றதேர்தல் விழிப்புணர்வு நாடகத்தை மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் துவக்கி வைத்தார். நாடக கலைஞர்கள் நாடக ஆசிரியர் குமணன் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினரும்,தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான நாடக கலைஞர் வி.கே. வாசுதேவன், சங்கர் ,பட்டு ,ஜெயராஜ் ஆகியோர் ஆரணி சிவா அம்மு (எ) சத்தியா அவர்களின் கலை குழுவுடன் இணைந்து வாக்களிப்பது பற்றிய விழிப்புணர்வு நாடகங்களில் நடித்து பொதுமக்கள்




வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டியும் நோட்டிஸ் பொதுமக்களிடம் வழங்கி வாக்களிப்பது நம் கடமை மட்டுமல்ல நம் உரிமை என்பதை விளக்கி பொதுமக்களுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு நோட்டீஸ் வழங்கி விழிப்புணர்வு ஈடுபட்டனர். மற்றும் ஆரணி சட்டமன்ற தொகுதியில் 100% வாக்களிப்பதற்காக கோலம் பொட்டி நடத்தப் பட்டது மற்றும் கையெழுத்து போட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆரணி தேர்தல் அதிகாரிகள்

பெண்கள் பொதுமக்கள் இளைஞர்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



## சென்னையில் வணிக காஸ் சிலிண்டர் விலை ரு.200 உயர்வு

சென்னை, ஏப்.2-

ஏப்ரல் மாதத்தின் முதல் நாளான இன்று, வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் காஸ் சிலிண்டர்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டரின் விலை சென்னையில் ரூ.200 உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்கு ஆசியப் பகுதியில் நிலவி வரும் போர் பதற்றம் மற்றும் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இந்த விலை உயர்வுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. இந்த விலை உயர்வு இன்று (ஏப்ரல் 1) முதல் அமலுக்கு வந்துள்ளது.

சென்னையில் வணிக சிலிண்டரின் விலை ரூ.2,140லிருந்து உயர்ந்து ரூ.2,240 ஆக விற்பனை செய்யப்படுகிறது. தலைநகர் டெல்லியில் ரூ.2078 ஆகவும், கொல்கத்தாவில் ரூ. 2208 ஆகவும், மும்பையில் ரூ.2031 ஆகவும் விற்பனை ஆகிறது.

வணிக சிலிண்டர் விலை சுமார் ரூ.200 ரூபாய் வரை உயர்த்தப்பட்டிருப்பது ஹோட்டல் உரிமையாளர்கள், உணவகங்கள் மற்றும் சிறு தொழில் செய்பவர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த விலை உயர்வு காரணமாக உணவகங்களில் உணவுகளின் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கள்ளச் சந்தையில் வணிக சிலிண்டர் ரூ.6500 வரை விற்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இதனால் பல உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளது.

வணிக சிலிண்டர் விலை கணிசமாக உயர்த்தப்பட்ட போதிலும், 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக காஸ் சிலிண்டர்களின் விலையில் தற்போதைக்கு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இது இல்லத்தரசிகளுக்குச் சற்று நிம்மதியைத் தந்தாலும், வணிக ரீதியிலான பாதிப்புகள் சந்தையில் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். மத்திய கிழக்கில் தற்போதைய மோதல் போக்கு நீடித்தால், வரும் காலங்களில் எரிபொருள் விலைகள் மேலும் உயர வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள ஆறு சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது

கூடுவாஞ்சேரி ஏப். 02-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள ஆறு சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மற்றும் மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் கூடுவாஞ்சேரி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ. அன்பரசன் தலைமை தாங்கினார். கூட்டணி கட்சி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்



நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற தலைவர் எம்.கே.டி.கார்த்திக்தண்டபாணி அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான திமுக சார்பில் ஆலந்தூர் தொகுதியில் தா.மோ. அன்பரசன், தாம்பரம் தொகுதியில் ஆர்.எஸ். கிருத்திகாதேவி, செங்கல் பட்டு தொகுதியில் எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி, தேமுதிக சார்பில் பல்லாவரம் தொகுதியில் அனகை முருகேசன், காங்கிரஸ் சார்பில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் சார்பில் திருப்போரூர் செல்வப் பெருந்தகை தொகுதியில் பன்னீர் தாஸ் ஆகிய 6 வேட்பாளர்களையும் கூட்டணி கட்சியை நிர்வாகிகள் மத்தியில் ஆ.ராசா எம்பி. ஒரே மேடையில் அறிமுக செய்து வைத்து சிறப்புயாற்றினார்.

தொகுதி எம்பி செல்வம் எம்எல்ஏக்கள் வரலட்சு மதுசூதனன், கருணாநிதி, காங்கிரஸ். மதிமுக, தேமுதிக விடுதலை சிறுத்தைகள் முஸ்லிம் லீக் மனிதநேய மக்கள் கட்சி எஸ்டிபிஜ. திராவிடர் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி திமுக உள்ளிட்ட பல்வேறு மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்பட 1000க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161